பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 08 | ஞாயிற்றுக்கிழமை | 21.04.2024 | அதிர்வு 264

## ராஜபக்ஷக்கள் மீது பழி சுமத்தாதீர்கள்!

### நாமல் கடும் சீற்றம்



"நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷக்கள்தான் காரணம் என்று எதிரணியினர் 06



# ரணில் எந்தப் பக்கத்தில் நின்றாலும் தமிழர்களின் வாக்குகள் அவருக்கே!

## சஜித்தை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள்; டிலானின் கருத்துக்கு வஜிர இப்படிப் பதிலடி



"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க எந்தப் பக்கத்தில் நின்று களமிறங்கினாலும், எந்தச் சின்னத்தில் போட்டியிட்டாலும் அவருக்கே வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார். 06

## இரு வருடங்களுக்குள் 1,800 வைத்தியர்கள் நாட்டை விட்டு ஓட்டம்

கடந்த இரண்டு வருடங்களுக்குள் 1,800 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க இந்த விடயத்தை நேற்று ஊடகங்களிடம் குறிப்பிட்டுள்ளார். 06

## வடமேல் மாகாண ஆளுநராக பதவியேற்கவுள்ளார் ஹாபீஸ்?



ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன்படி வடமேல் மாகாண ஆளுநராகப் பதவி வகிக்கும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தென்மாகாணத்துக்கு மாற்றப்படவுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சர் ஹாபீஸ் நஷீர் 06

## தமிழ்ப் பொது வேட்பாளர்: முட்டாள்தனமான முயற்சி!

### அரவிந்தகுமார் கடும் எதிர்ப்பு



"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற யோசனை நகைச்சுவையானது. அவ்வாறான முயற்சிக்கு நான் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டேன்."

– இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- 06




'கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது' என்பார்கள்.

அண்மையில் யாழ் செயலகத்தில் நடந்த யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி எம்.பியான சிறீதரன் துளாவியடித்த ஒரு 'ஷொட்' கனகச்சிதமாக விழ வேண்டிய இடத்தில், கணக்காக விழுந்திருக்கின்றது போலும்.

சிறீதரன் அந்தக் கூட்டத்தில் கிணறு வெட்ட, விவகாரத்துக்குரியவர் அவர் வீடு தேடி வந்து விட்டார் என்று இப்போது தெரிகின்றது.

அந்தக் கூட்டத்தில் வடக்கில் சுண்ணக்கல் அகழப்படுவது குறித்து அரசல் புரசலாக அடிபட்ட கதைகளை ஒரு பேச்சுக்குப் போட்டுப் பிடித்தார் சிறீதரன். 06





# அம்பேவல பண்ணைக்கு நேற்று ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அம்பேவல பண்ணைக்கு நேற்று கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பண்ணையின் அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார்.

இதன் பின்னர் ஊழியர்களுடன் உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அம்பேவல பண்ணையின் பால் உற்பத்தித் துறையில் எட்டப்பட்டுள்ள படிப்படியான வளர்ச்சி மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பையும் பாராட்டினார்.

பண்ணைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இதன்போது ஜனாதிபதி எடுத்துக்காட்டினார் என ஜனாதிபதி ஊடப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று அம்பேவல பால் பண்ணையைப் பார்வையிட வருகை தந்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துக் கலந்துரையாடினார்.



1940 காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அம்பேவெல பண்ணை, 2001 ஆம் ஆண்டு தனியார் மயமாக்கப்பட்டதுடன், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விரிவான நவீனமயமாக்கல் காரணமாக, அது தற்போது இலங்கை மற்றும் தெற்காசியாவில் பால் உற்பத்தி மற்றும் பண்ணைத் தொழில்நுட்பத்தின் அதியுயர் தொழில்நுட்பப் பாவனையுடன் கூடிய பிரதான மையமாக மாறியுள்ளதாக அம்பேவெல பண்ணை குழுமத்தின் பொது முகாமையாளர் சரத் பண்டார தெரிவித்துள்ளார்.

2022 டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதி பண்ணைக்குச் சென்றபோது, அதன் தினசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு சுமார் 40,000 லிற்றராக இருந்ததுடன், பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் காரணமாக இவ்வருடம் நாளாந்தம் 52,000 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுவதாகவும் இது 30 வீத அதிகரிப்பாகும் எனவும் சரத் பண்டார மேலும் தெரிவித்தார்.

பால் உற்பத்தித் திறனை படிப்படியாக அதிகரித்து ஆண்டுக்கு 20 மில்லியன் லிட்டர் பால் உற்பத்தி செய்ய பண்ணை குழு செயல்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.









# பல்கலை மாணவிக்குப் பாலியல் தொல்லை: பொலிஸாரிடம் சிக்கிய இராணுவச் சிப்பாய்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாணந்துறையிலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குப் பிரயாணம் பல்கலைக்கழக மாணவி ஒருவருக்குப் பாலியல் சேஷ்டை புரிந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

காலி பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் சியம்பலாண்டுவ, புத்தகம பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இராணுவச் சிப்பாயே சியம்பலாண்டுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சியம்பலாண்டுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரவீந்திர ஹேரத்தின் பணிப்புரையின் பேரில் பெண் பொலிஸ் அதிகாரி சமன்மாலி தலைமையிலான பெண் பொலிஸ் குழுவினர் பயணித்த பஸ்ஸை இடையில் நிறுத்தி சந்தேகநபரான இராணுவச் சிப்பாயைக் கைது செய்துள்ளனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளருக்கு 2,000 ரூபா வழங்கப்படவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கோரிக்கை

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்சம் இரண்டாயிரம் ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்கப்பட வேண்டும்."

– இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தற்போதைய சூழ்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா அல்லது இரண்டாயிரம் ரூபாய் வழங்கினால் கூட அவர்களின் வாழ்க்கை செலவுகளுக்குப் போதுமானதாக இருக்காது.

எவ்வாறாயினும், குறைந்தபட்சம் நாளாந்த வேதனமாக இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்."– என்றார்.

இதேவேளை, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளம் ஆயிரத்து 700 ரூபாவை வழங்க வேண்டுமென வலியுறுத்தியும், பெருந்தோட்ட நிறுவனங்களின் அசமந்தபோக்கைக் கண்டித்தும் இன்று ஊவா மாகாணத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.



அதன்படி, பசறை, ஹாலிஎல, ஹப்புத்தளை, பள்ளகெட்டுவ மற்றும் மொனராகலை ஆகிய நகரங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எச்சரிக்கை மட்டம் வரையில் வெப்பநிலை உயர்வடையும்!

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு




நாட்டின்பலபகுதிகளில்வெப்பநிலையானதுஎச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடையக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, வடக்கு, வடமத்திய, மேற்கு, சபரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனவே சிறுவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இந்த நிலைமை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்வதற்காக போதியளவு நீரைப் பருகுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் நிலவிவரும் மழையுடனான வானிலை படிப்படையாக குறைவடையும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# 18 பிரிவுகளுக்கு நீர் விநியோகம் இனி நேர அட்டவணைக்கமைய



நேர அட்டவணைக்கமைய 18 நீர் வழங்கல் பிரிவுகளுக்கு நீர் விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபையின் பிரதி பொது முகாமையாளர் அனோஜா களுஆராச்சி தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தின் உலப்பனை, பாரதிக்க, தொளுவ, கம்பளவத்த, புஸ்ஸல்லாவ, அங்கும்புர, மாரஸ் தென்ன, மெதஹம்பர, குண்டசாலை ஆகிய பகுதிகளுக்கு நேர அட்டவணைக்கமைய நீர் விநியோகிக்கப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தளை மாவட்டத்தின் புஸ்ஸெல்ல பகுதியிலும், நுவரெலியா மாவட்டத்தின் ஹட்டன், கொட்டகலை, ராகலை, ரிக்கில்கஸ்கட, மாத்தறை மாவட்டத்தின் ஊருபொக்க, ரதம்பல மற்றும் மொனராகலை மாவட்டத்தின் சூரிய ஆர ஆகிய பகுதிகளிலும் இவ்வாறு நேர அட்டவணைக்கமைய நீர் விநியோகம் முன்னெடுக்கப் படவுள்ளது.

மழைக்காலம் ஆரம்பித்த பின்னர் நீரேந்து பகுதிகளில் காணப்படும் அபாய நிலை நீங்கும் பட்சத்தில், வழமையான முறையில் நீர் விநியோகிக்கப்படும் என அனோஜா களுஆராச்சி தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலில் உள்ள 70 வீத இலங்கையர்கள் பாதுகாப்பாகவே பணியாற்றி வருகின்றனர்

## இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு



இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களில் சுமார் 70 வீதமானோர் வீடுகளில் பாதுகாப்பாக பணியாற்றி வருகின்றனர் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர்களில் சுமார் 15 வீதமானோர் விவசாயத்துறையில் பணியாற்றுகின்றனர் எனவும், ஏனையோர் கட்டுமானத்துறையிலும், ஏனைய துறைகளிலும் பணியாற்றுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் வடக்கு பிராந்தியத்தில் லெபனான் எல்லைப் பகுதியினூடாக இடைக்கிடையே ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், அந்த வலயத்தில் வசித்து வந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் அந்த இடத்திலிருந்து தற்காலிகமாக வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களிடையே காணப்பட்ட இலங்கையர்களும் புதிய இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அந்த இலங்கையர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாது எனவும் அவர் உறுதிப்படுத்தினார்.

இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் அந்நாட்டிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளுக்கு எவரேனும் முகங்கொடுத்தால், தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து ஐரோப்பாவிற்கு பயணிக்கும் பெரும்பாலான விமானங்கள் இஸ்ரேல் வலயத்தின் ஊடாகவே பயணிப்பதனால், விமானப் பயண மார்க்கத்தில் மாற்றம், பாதுகாப்பு காரணங்களினால் பயணம் தாமதமடைகின்றமை ஆகிய இடையூறுகள் ஏற்படலாம் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.



# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிட்டால் கைது!

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடம் அதிகளவு கட்டணம் அறவிடும் ஓட்டோச் சாரதிகள் மற்றும் வாடகை வாகன சாரதிகளை கைது செய்யும் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கபெற்றுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டதரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். அவ்வாறான நபர்களை அடையா ளம் காண்பதற்காக சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அதிகமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயணிக்கும் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இது குறித்து அறிவிக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# கடன் ஸ்திரநிலையை ஏற்படுத்துவதற்கு பாரிஸ் கிளப் தொடர்ந்தும் ஒத்துழைப்பு

நாட்டில் கடன் ஸ்திரநிலையை ஏற்படுத்துவதற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக பாரிஸ் கிளப் மீண்டும் தெரிவித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் பாரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பல்தரப்பு செயற்பாடுகள் சார்ந்த வர்த்தக மற்றும் அபிவிருத்திக் கொள்கைகள் திணைக்களத்தின் உதவிச் செயலாளராகவும் வில்லியம் ரூஸ் கடமையாற்றுகின்றார்.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடனும், ஏனைய தரப்பினருடனும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கருத்துகள் பரிமாறப் பட்டுள்ளன.

வொஷிங்டன் நகரில் இடம்பெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய



நிதியத்தின் அரையாண்டுக் கூட்டத்தின் போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதனிடையே, ஓ.பி.ஈ.சி. நிதியத்தின் தலைவர் அப்துல் ஹமீட் அல் கலீஃபாவையும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சந்தித்துள்ளார்.

இலங்கையின் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை செயற்றிட்டங்களுக்காக நிதி வசதிகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அப்துல் ஹமீட் அல் கலீஃபா இதன்போது தெரிவித்துள்ளார்.

தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அரசாங்கத்தினால் பின்பற்றப்படும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளைப் பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவரமைப்பின் பிரதி நிர்வாகி அஞ்சலி கௌர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இடையிலான சந்திப்பும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"காங்கேசனதுறையில் இயங்கிய சீமேந்து ஆலைக்காக சுண்ணக்கல் அகழ்ந்த பிரதேசங்களான காங்கேசன் துறை, பலாலி தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள பாரிய இரு குழிகளும் இன்றுவரை மூடமுடியாமல் ஆபத்தான நிலையில் குடிமனைகளின் நடுவே உள்ளன. இந்த நிலையில் தற்போது இன்றும் புத்தூர், மாதகல், இளவாலை போன்ற பல பகுதி களில் சிலர் இரகசியமான முறைகளில் சுண்ணக்கல் அகழ்ந்து மூடிய பார ஊர்தி களில் திருகோணமலைக்கு எடுத்துச் செல்கின்றனர்.

இவ்வாறு தினமும் 10 முதல் 15 வரை யான மூடிய பார ஊர்திகளில் கற்கள் திரு கோணமலைக்கு எடுத்துச்செல்லப்படுகின் றன. எந்தத் திணைக்களமாவது இதற்கு அனுமதி வழங்கியதா?" – என்று துளாவி அடித்துக் கேள்வி எழுப்பினார் எம்.பி.

அப்போது அங்கிருந்த புவிச் சரிதவி யல் திணைக்களத்தைச் சேர்ந்த மயூரன் அவ்வாறான எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை எனப் பதிலளித் தார்.

குடாநாட்டில் இருந்து வெளிவரும் ஊடகங்களில் சிறீதரன் எம்.பியின் குற் றச்சாட்டு அடங்கிய செய்தி வெளிவந்த நிலையில், பத்திரிகை மற்றும் சில ஆவ ணங்கள் சகிதம் நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறிதரனின் இல்லத்திற்குச் சென்ற யாழ். நகரின் ஒரு பிரபல வர்த் தகர் தாம் தினமும் 4 ஊர்திகளில் மட்டுமே கல் ஏற்றிச் செல்கிறார் எனவும், அவை பணம் கொடுத்துப் பெற்றே எடுத் துச் செல்லப்படுகின்றன எனவும் எம். பியிடம் விளக்கம் கூறியிருக்கின் றார்.

ஆகையால் மாவட்டச் செயலகத்தில் எம்.பி. தெரிவித்த கூற்றிற்கு அவரே மறுப் புத் தெரிவிக்க வேண்டும் என அந்த 'நகர வர்த்தகர்' தரப்பில் சற்றுக் காட்டமாகக் கூறப்பட்டதாகவும் தகவல்.

இதன்மூலம் தினமும் 4 பார ஊர்தி கல் யாழில் இருந்து எடுத்துச் செல்லப்படுவது உறுதியாகியுள்ளது என்பது மட்டும் இப்போதைக்கு உண்மையாகியுள் ளது.

## இரு வருடங்களுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த காலப்பகுதியில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேவையாற்றி வந்த மூன்றாவது மயக்கவியல் வைத்திய நிபுணரும், அதிகாரிகளுக்கு அறிவிக்கா மல் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார் என்றும தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வைத்தியசாலையின் பணிப் பாளர் இந்த விடயத்தை ஊடகங்களிடம் நேற்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேவையாற்றிய இரண்டு மயக்கவியல் வைத்திய நிபு ணர்கள் முன்னறிவிப்பின்றி வெளி நாட்டுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# 40 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இலங்கையில் பற்றாக்குறை




இலங்கையில் சுமார் 40 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவு கின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத் துரைக்கும்போது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைக் கூறியுள்ளார்.

குறிப்பாக மேல், கிழக்கு, வடமத் திய மற்றும் ஊவா மாகாணங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின் றது என்றும் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

## ரணில் எந்தப் பக்கத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

"சஜித் பிரேமதாஸவையோ அல்லது அநுரகுமார திஸாநாயக்கவையோ நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாரில்லை. எனவே, அவர்கள் இருவரையும் தமிழ் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள்" – என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவரால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்க ளின் ஆதரவைப் பெற முடியாது என்று சஜித் அணி பக்கம் தாவியுள்ள நாடாளு மன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். அவரின் கருத்துக்குப் பதில் வழங்கும் போதே ஐ.தே.கவின் எம்.பி. வஜிர அபே வர்தன மேற்கண்டவாறு கூறினார்.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கி ணங்கவே சஜித் பிரேமதாஸவுக்குத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கினார்கள். எனி னும், அவரால் வெற்றிபெறவில்லை. ஆனால், இம்முறை ரணில் விக்கிரம சிங்கவும் போட்டியிடுகின்றார். வீழ்ச்சிய டைந்த எமது நாட்டை மீட்டெடுத்த தலை வர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க வுக்கே தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் வாக்களிப்பார்கள்." – என்று வஜிர எம்.பி. மேலும் தெரிவித்தார்.

## தமிழ்ப் பொதுவேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் நகைச்சுவையானது. தமிழர்கள் ஓரணி யில் உள்ளனர் என்ற தகவலை மட்டுமே அதன்மூலம் வழங்கலாம். மாறாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ்ப் பொது வேட்பாளரால் ஆட்சிக்கு வரமுடியாது. எனவே, முடியாதவொரு விடயத்துக்கு எதற்காக முயற்சி எடுக்க வேண்டும்? இந்த யோசனையை நான் கண்டிக்கின்றேன். ஆதரவு வழங்கப் போவதும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறு பவரின் ஆதரவு தமிழ் மக்களுக்கு அவசி யம். சிலவேளை அனைத்து தமிழர்க ளும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித் தால் அது தேவையற்ற பிரிச்சினைக்கு வழிவகுக்கும். எனவே, இது முட்டாள் தனமான முயற்சியாகும்." – என்றார்.

## வடமேல் மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அஹமட் நியமிக்கப்படவுள்ளார்.

தென்மாகாண ஆளுநராகச் செயற் படும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட் சிக்கு நெருக்கமானவர் எனக் கருதப்படும் விலி கமகே ஆளுநர் பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இம்மாற்றம் இடம்பெறவுள்ளது என தெரியவரு கின்றது.

## ராஜபக்ஷக்கள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பழி சுமத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும்."

– இவ்வாறு வலியுறுத்தினார் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின்தேசியஅமைப்பா ளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"கொரோனாத் தொற்று மற்றும் வெளி நாடுகளுக்கிடையிலான மோதல்களால் இலங்கையில் மட்டுமல்ல பல நாடுக ளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது.

எதிரணியினரும், சில வெளிநாட்டுத் தூதரகங்களும் இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி மொட்டு அரசுக்கு எதிராக எதிரணியின் ஆதரவாளர்களான ஒரு தொகுதி மக்களைத் திசைதிருப்பினர். போராட்டம் என்ற பெயரில் அந்தக் கூட் டத்தினர் நாட்டில் பாரிய தொடர் வன்முறை களுக்குச் சதித்திட்டம் தீட்டினர். அந்த நிலைமை நாட்டில் ஏற்படக்கூடாது என் பதை உணர்ந்தே ராஜபக்ஷக்கள் தாம் வகித்த பதவிகளிலிருந்து விலகினார் கள்.

எனினும், மொட்டு அரசின் ஆட்சி தான் தற்போதும் தொடர்கின்றது. எமக் கான மக்கள் ஆதரவில் வீழ்ச்சி எதுவும் ஏற்படவில்லை. எந்தத் தேர்தல் நடந் தாலும் மொட்டுக் கட்சிதான் வெற்றிவாகை சூடும்." – என்றார்.



# 13 வயது சிறுமிக்கு கர்ப்பம் குளியாப்பிட்டியில் சம்பவம்

**(எம்.எச்.எம் சியாஜ்)**

13 வயது சிறுமி ஒருவர் கர்ப்பம் தரித்த சம்பவம் தொடர்பில் ஹெட்டிப்பொல பொலிஸார் நேற்று முன்தினம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி கடந்த சில நாள்க ளாக வயிற்று வலியினால் அவதிப் பட்டுள்ள நிலையில் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் வைத்திய பரிசோதனையில் சிறுமி கர்ப்பமாக உள்ளமை தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியிடம் விசாரணை நடத்திய போது அவர் இது தொடர்பில் எந்தவித தகவலும் தெரிவிக்கவில்லை எனப் பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து இந்த சிறுமி மேலதிக பரிசோதனைகளுக்காக குளியாப்பிட்டிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த சிறுமி உடலுறவு கொண்ட தற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொக்கைனை கொண்டு வந்த வெளிநாட்டுப் பெண்கள் கைது

20 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கைன் போதைப்பொருளை உடலுக்குள் மறைத்துக் கொண்டு வந்த வெளிநாட்டுப் பெண்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துருக்கியின் இஸ்தான்புல் ஊடாக இலங்கைக்கு வருகை தந்த போதே அவர்கள் இருவரும் சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கினி மக்கள் குடியரசின் பிரஜைகள் என சுங்கப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

உடலில் 40 கொக்கெய்ன் வில்லைகளை அவர்கள் மறைத்துக் கொண்டு வந்தனர் எனவும் அவை 500 கிராம் நிறையுடையவை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# பெருந்தோட்ட வீட்டுத் திட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

இந்திய நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் 10 ஆயிரம் பெருந்தோட்ட வீட்டுத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தேசிய வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஆறு மாவட்டங்களின் பெருந்தோட்டப் பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என அதன் தலைவர் ரஜீவ் சூரியாராய்ச்சி தெரிவித்துள்ளார். ஒரு வீட்டிற்கு 28 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

பிரதேச செயலகங்கள் மற்றும் தோட்ட நிர்வாகங்களின் ஊடாக இந்த வீட்டுத் திட்டத்திற்குத் தகுதியான நபர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், அதன் நிர்மாணப் பணிகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் முன்னெடுக்கப் படுகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்குள் 10,000 வீடுகளையும் மக்களுக்குக் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

# இளைஞர் விவசாயத்துக்கு ரூ. 25 பில்லியன் ஒதுக்கீடு



இந்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும் இளைஞர் விவசாய புத்தாக்க வேலைத்திட்டத்திற்காக 25 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

200 பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறைந்தது 200 கிராமங்கள் இளைஞர் விவசாய தொழில் முயற்சி கிராமங்களாக அபிவிருத்தி செய்யப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரோன் தொழில்நுட்பத்தை வழங்குதல், நெற்பயிர்ச்செய்கைக்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்தல், நீர்ப்பாசனத்திற்கு தெளிப்பு நீர் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல், அதிக மகசூல் தரும் விதைகளை நடுதல் போன்ற பல திட்டங்களை இதன் கீழ் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இனவழிப்பை நிரூபிக்க.....

முன்னரெல்லாம் மே மாதம் என்றால் நினைவுக்கு வருவது மேதினம் தான். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக, மே மாதம் என்பது தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் கொடூரங்கள் பற்றிய அவல நினைவையே தமிழ் இனத்திற்குத் தந்து நிற்கின்றது.

முள்ளிவாய்க்கால் வரை நீண்ட அந்த வரலாற்று மனிதப் பேரவலத்தைத் தமிழினம் சந்தித்து 15 ஆவது ஆண்டு நிறைவில் இப்போது நிற்கின்றோம்.

தமிழர்களுக்கு மனிதப் பெரும் கொடூரம் இழைக்கப்பட்ட இலங்கை மண்ணில், அந்த அட்டூழியங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. நியாயம் கிட்டவில்லை. பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்படவில்லை.

ஆனாலும், தமிழர்கள் வாழும் புலம் பெயர் தேசம் எங்கும் இந்த மனிதக் கொடூரத்திற்கு எதிரான உணர்வலைகள் இன்னும் உயிர்ப்போடும், உறுதியோடும், உச்சச் சீற்றத்தோடும்தான் இருக்கின்றன.

இந்தத் தடவை மே மாதத்தில் இலங்கைக்கு எதிராக இனவழிப்பு (Genocide) குற்றச்சாட்டை பெரிய அளவில் கனடா முன்னெடுக்கக் கூடும் என்று எதிர்பார்க்கும் இலங்கை ராஜதந்திரத் தரப்புகள் அத்தகைய நிலைமையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை தயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

இந்தப் பின்புலத்தில்தான், தமிழினம் இந்த வரலாற்றுப் பேரழிவை - மனித கொடூரத்தை - எதிர்கொண்டு 15 ஆண்டுகளாகியும் தனக்கு எதிராக இழைக்கப்பட்ட இனவழிப்பு மற்றும் இனச் சுத்திகரிப்பு போன்ற கொடூரங்களை, அது தொடர்பான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான காத்திரமான ஆவணப்படுத்தலை - ஆதாரங்களை - சாட்சியங்களை - ஒழுங்குபடுத்தவில்லை, ஒருங்குபடுத்தவில்லை என்ற ஒரு குறைகூறல் தொடர்ந்து நடுநிலைப் பார்வையாளர்களால் முன்வைக்கப்படுகின்றது.

இந்தச் சூழலில்தான் 'இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பும் இனச்சுத்திகரிப்பும்' (Structural Genocide & Ethnic Cleansing of Tamils in SriLanka) என்ற ஆவண நூலை தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சி நேற்று வெளியிட்டிருக்கின்றது.

ஓரினத்துக்கு எதிராக இனவழிப்பு நிகழ்த்தப்பட்டது என்ற குற்றச்சாட்டை சர்வதேச மட்டத்தில் நிலைநிறுத்தவும், நிரூபிக்கவும் அந்த நூலில் கூறப்பட்டுள்ள தகவல்கள், சுட்டிக்காட்டப்பட்டுள்ள விவரங்கள், விவரிக்கப்படும் அம்சங்கள் போன்றவை போதுமானவைதானா என்பதை ஆய்வாளர்களும் அவதானிகளும் இனித்தான் வெளிப்படுத்தத் தொடங்குவர்.

எனினும் ஓரினத்துக்கு எதிராகத் திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்டு, கட்டவிழ்க்கப்பட்ட இத்தகைய மோசமான மனித விரோத நடவடிக்கைகளை யுத்த குற்றங்கள் (War Crimes), மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் (Atrocities against humanity), அடிப்படை மனித உரிமை மீறல்கள்(Human Rights violation), இன அழிப்பு (Genocide), இனச்சுத்திகரிப்பு(EthnicCleansing), இனப்படுகொலை (Pogrom) என்ற பல சொல்லாடல்களில் சர்வதேச ராஜதந்திர மட்டத்தில் விவரிப்பார்கள்.

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக பௌத்த - சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்து விட்ட இனக்கொடூரங்கள் இவற்றில் எந்த வகையைச் சார்ந்தவை என்பது தொடர்பில் சர்ச்சைகள், குழப்பங்கள், கருத்து முரண்பாடுகள் உண்டு. பல்வேறு வியாக்கியானங்கள், விமர்சனங்கள் உண்டு.

எனினும் அவை குறித்து ஒரு தீர்க்கமான தீர்மானத்திற்கு வருவதற்கு முதலில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களின் முழு விவரங்களும் ஆவணப்படுத்தப்பட்டு பட்டியல் படுத்தப்பட வேண்டும்.

பட்டயக் கணக்காளர் செல்வேந்திரா சபாரத்தினம்தமது தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சி ஊடாக நேற்று வெளிக்கொணர்ந்திருக்கும் ஆவண நூல் இந்த வரிசையில் முதல் அடி.

இவ்விடயத்தில் இன்னும் நீண்ட தூரம் நாம் செல்ல வேண்டி இருக்கும். அதற்கான வழிகாட்டலை இந்த மண்ணில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நேரில் தான் பெற்ற அனுபவங்களின் ஊடாக உள்வாங்கி வெளிப்படுத்தியிருக்கின்றார் ஆசிரியர்.

அந்த முயற்சி முற்றுப்பெற்று விட்டது என்பதல்ல. அஞ்சலோட்டத்தில் அவரது பங்கு காத்திரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆற்றப்பட்டிருக்கின்றது. அடுத்த அஞ்சல் வீரர்கள் அஞ்சல் கோலை தொடர்ந்து சுமந்து, மேலும் வீச்சாக ஓட வேண்டி இருக்கும். அப்போதுதான் இனவழிப்புக் குற்றத்தை ஓரளவுக்காவது, சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, சந்தேகத்திற்கு அப்பால் நாம் நிலைநிறுத்த முடியும்.

# சென்னையில் 3 வாக்கு எண்ணும் மையங்களில் 4 அடுக்கு பாதுகாப்பு; பொலிஸ் ஆணையர் ஆய்வு



சென்னையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள 3 வாக்கு எண்ணிக்கை மையங்களில் சென்னை பெருநகர பொலிஸ் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் ஆய்வு செய்துள்ளார்.

ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மையங்களிலும் 4 அடுக்கு பாதுகாப்பு பணியில் மத்திய பாதுகாப்பு படை மற்றும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக காவல்துறை தரப்பில் வெளியிட்ட செய்தியில், தமிழகத்தில் 2024 மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது.

சென்னை பெருநகர பொலிஸ் எல்லைக்குட்பட்ட இடங்களில் வடசென்னை, மத்திய சென்னை மற்றும் தென்சென்னை ஆகிய 3 நாடாளுமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குப் பதிவு இயந்திரங்கள் ஆயுதங்கள் ஏந்திய பொலிஸ் மூலம் பாதுகாப்பாக எடுத்து செல்லப்பட்டு ராணிமேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய 3 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர பொலிஸ் ஆணையர் உத்தரவின் பேரில், கூடுதல் ஆணையர்கள் மேற்பார்வையில், இணை ஆணையர்கள் கண்காணிப்பில், துணை ஆணையர்கள் தலைமையில் மேற்படி 3 வாக்கு எண்ணும் மையங்களிலும் 4 அடுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் அடுக்கில் மத்திய ஆயுத காவல் படையினரும், 2 ஆவது அடுக்கில் தமிழ்நாடு சிறப்பு காவல் படையினரும், 3 ஆவது அடுக்கில் சென்னை பெருநகர ஆயுதப்படையினரும், 4 ஆவது அடுக்கில் சென்னை பெருநகர காவல் சட்டம் மற்றும் ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து, சிறப்பு பிரிவுகளைச் சேர்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களும் நியமிக்கப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உத்தர பிரதேச பா.ஜ.க. வேட்பாளர் உயிரிழப்பு

மக்களவை தேர்தலில் உத்தர பிரதேசத்தின் மொராதாபாத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளரும், முன்னாள் எம்.பி.யுமான குன்வர் சர்வேஷ் சிங் உயிரிழந்துள்ளார்.

உடல்நலக்குறைவால் டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பலனின்றி காலமானார்.

உத்தர பிரதேச மாநிலம் மொராதாபாத் தொகுதியில் பா.ஜ.க. சார்பில் வேட்பாளராக களமிறங்கியவர் குன்வர் சர்வேஷ் சிங் (வயது 71). அப்பகுதியில் செல்வாக்கு மிக்க பா.ஜ.க. பிரமுகராக விளங்கிய இவர் கடந்த சில மாதங்களாகவே உடல்நலக்குறைவால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

தொண்டையில் இவருக்கு பிரச்சினை இருந்ததாகவும், அதற்காக அண்மையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தேர்தல் பிரச்சாரங்களிலும் கூட குன்வர் சர்வேஷ் சிங் முழுமையாக பங்கேற்கவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

குன்வர் சர்வேஷ் சிங் மறைவுக்கு தனது எக்ஸ் பக்கத்தில் இரங்கல் தெரிவித்துள்ள உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்,

"மொராதாபாத் மக்களவைத் தொகுதியின் பா.ஜ.க. வேட்பாளரும், முன்னாள் எம்.பியுமான குன்வர் சர்வேஷ் சிங்கின் மறைவு என்னை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. பா.ஜ.கவின் குடும்பத்துக்கு இது ஈடு செய்ய முடியாத இழப்பு. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது இரங்கல்கள். அவரது குடும்பத்தினருக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும் இந்த இழப்பைத் தாங்கும் சக்தியை அளிக்க கடவுள் ராமரை பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



குன்வர் சர்வேஷ் சிங் மொராதாபாத் தொகுதியில் எம்.பியாக இருந்தவர். அதற்கு முன்பு தாகுர்த்வாரா சட்டமன்ற தொகுதியில் நான்கு முறை எம்.எல்.ஏ-வாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

## மதுரை கள்ளழகர் கோயிலில் சித்திரை திருவிழா ஆரம்பம்

மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழா கோலாகலமாகத் தொடங்கியது.

இன்று அழகர்மலையிலிருந்து மதுரைக்கு கள்ளழகர் புறப்பாடாகிறார்.

கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

முதல் நாளான நேற்று முன்தினம் மாலை தோளுக்கினியான் பல்லக்கில் சிறப்பு அலங்காரத்தில் சுந்தரராஜப் பெருமாள் எழுந்தருளினார். அப்போது நடைபெற்ற சிறப்பு பூஜையில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.



# இலங்கையில் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பும் இனச் சுத்திகரிப்பும்!

## ஆவண நூலை தமிழ் மக்கள் கூட்டணி நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டது

“இலங்கையில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பும் தமிழ் மக்களின் இனச் சுத்திகரிப்பும்” (**“Structural Genocide and Ethnic Cleansing of Tamils in Sri Lanka”**) என்ற ஆங்கில நூல் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் கூட்டணியினரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கோவில் வீதி நல்லூரில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை நூல் வெளியிடப்பட்டது.

இதன்போது தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன், நூலாசிரியர் பட்டயக் கணக்காளர் செல்வேந்திரா சபாரட்ணம் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வரவேற்புரையை த.சிற்பரனும், நூல் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கமும், நன்றியுரையை க.இராஜதுரையும் ஆற்றினர்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு மற்றும் இன சுத்திகரிப்பு நடவடிக்கைகள் பற்றிய விவரமான விடயங்கள், ஆதாரங்கள், விவரங்கள் பதிவுகளைக் கொண்ட முழுமையான ஆவணமாக இது வெளியாகின்றது என நூலாசிரியர் பட்டயக் கணக்காளர் செல்வேந்திரா சபாரட்ணம் தமது நூலாசிரியர் உரையில் குறிப்பிட்டார்.
















# மனிதனின் சுயநலத்தால் இயற்கை கண்ணீர் விடுகிறது

மனிதன் தனது சுயநலதால் நிகழ்கால, எதிர்கால சந்ததிகளின் இருப்புப் பற்றிய எந்த விதமான தூர நோக்கும் இன்றி சின்னத்தனமாகச் செயல்படுகிறான். இயற்கையோடு இயல்பாக ஒன்றித்து வாழும் வாழ்வியலுக்கு எதிராக, இயற்கையை எதிர்த்து, தன்னையும் தன் சந்ததியையும் தானே அழிக்கின்றான். இந்தப் போக்கை அறிவு பூர்வமாக உணராமல் அல்லது உணர்ந்தும் தெளியாமல் தன் நலனில் மட்டுமே சிரத்தை கொள்கிறான் என்பதே வேடிக்கையான உண்மை.

இயற்கை தன்னியல்பை எப்போது இழக்கிறதோ அப்போதே மனிதன் இயல்பாக உயிர் வாழ முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்பதே இயற்கையின் சமநிலை கட்டமைப்பு. அதனால் தான் ஒரு நாட்டில் மூன்றில் ஒரு பகுதி காடாக இருக்க வேண்டும் என்பது நியதி. ஒரு மனிதன் சுகதேசியாக சுவாசிக்க 422 மரங்கள் தேவை. கனடாவில் ஒருவருக்கு பத்தாயிரம் மரங்கள் உள்ளன. உலகில் ரஷ்யாவில் தான் அதிக மரங்கள் உள்ளன. 642 பில்லியன்.

அதேபோல் கனடா, பிரேசில், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் மக்கள் குடித்தொகைகளுக்கு ஏற்ப போதுமான மரங்கள் உள்ளன.

ஒரு வாகனத்தின் நச்சுப் புகையைக் கட்டுப்படுத்தி சமன் செய்ய ஆறு மரங்கள் வேண்டும். நச்சுக் காற்றை மூச்சுக்காற்றாக மாற்றுவது மரங்களே.

ஒரு யானை ஒரு நாளைக்கு முந்நூறு தொடக்கம் ஐநூறு வரை மரங்களை உற்பத்தி செய்ய உதவுகிறது. தனது வாழ்நாளில் 18 லட்சத்து 25 ஆயிரம் மரங்களை உற்பத்தி செய்ய வழி பண்ணுகிறது. ஆனால் மனிதன் இவற்றையெல்லாம் வகைதொகையில்லாமல் அழிக்கின்றான்.

வடகிழக்கு உட்பட நாடு முழுவதும் ஆறுகள் அனாதை ஆக்கப்பட்டு விட்டன. இவற்றில் சட்டரீதியான மற்றும் சட்டவிரோத முறைகளில் கட்டுப்பாடு இன்றி மணல் அகழ்வு நடைபெற்று வருகின்றது. இந்த ஆறுகள் இயல்பாகவே நிலப்பரப்பிலிருந்து ஐந்து தொடக்கம் ஏழு மீட்டர் ஆழமானவை. இருபது தொடக்கம் இருபத்தைந்து மீட்டர் அகலமானவை. ஆனால் தற்போது பல மடங்கு ஆழமாகவும் நீளமாகவும் அவை காணப்படுகிறது. ஆற்றங்கரையில் இருபுறமும் உள்ள பல நூற்றாண்டு கடந்த மரங்கள் சாய்ந்து கிடக்கின்றன.


வி.எஸ்.சிவகரன்

அதிக மணல் அகழ்வினால் இயற்கைச்சமநிலை மாறுபடும், மண்ணின் தரம் குன்றும், கடல் நீர் நிலப்பரப்புக்குள் ஊடுருவும், உவர் நீர் உருவாகும், பூமியில் வாழுகின்ற உயிரினங்களின் பாதுகாப்பு நிலை குலைந்துவிடும், நீரின் தரம் குன்றிவிடும், மரங்கள் பாதிப்படையும் போது இயல்பாகவே வறட்சி ஏற்படும், நிலத்தடி நீர் விரைவில் ஆவியாகிவிடும், நன்னீர் மட்டம் கீழ் இறங்கிவிடும், தொற்றா நோய்கள் ஏற்படும், விவசாயம் முழுமையாகப் பாதிக்கப்படும், அதனால் உணவு உற்பத்தி நலிவடையும், ஆரோக்கியமற்ற பிறப்பு வீதம் ஏற்படும், சமூகப் பிறழ்வு உருவாகும் . இன்னும் பல கேடுகள் மனிதனுக்கு ஏற்படும்.

ஒரு சதவீத மரங்கள் அழிந்தால் சமூகத்தில் எட்டு விதமான கொசுக்கள் உற்பத்தியாகும் என்கிறார்கள் ஆய்வாளரர்கள். உலகில் கொசுக்களால் தான் அதிக மரணம் நிகழ்கிறது. மண்ணுக்கும் மரத்திற்கும் கேடு விளைவிப்பதால் இயற்கை அனர்த்தம் ஏற்படும். வெப்பமயமாதல் அதிகரிக்கும். தற்போது அதிகூடிய வெப்பநிலை கூட இதற்கு நிகழ்கால உதாரணம். அது மட்டுமன்றி, அதிகமான இயல்பற்ற இயற்கைச் சீற்றம் ஏற்படலாம். பருவம் கடந்த மாறுதல் உருவாகின்றது. காலக்கணிப்பை விஞ்சி விடுகிறது காலநிலை மாற்றம்.

தற்போது வளைகுடா நாடுகளில் அதிகூடிய கனமழை பெய்வதும் காலநிலை மாறுதலே.

இது எல்லாம் இயற்கைக்கு எதிராக மனிதன் ஏற்படுத்தும் வன்கொடுமையின் விளைவுகளே. இயற்கை மீதான தாக்குதல்களை மனிதன் நிறுத்துவதாக இல்லை. இவற்றை ஒழுங்கு முறையாகச் சீர்படுத்த முடியவில்லை. இதற்கு அனுமதி வழங்குகின்ற திணைக்களங்கள் லஞ்சம் பெற்றுக்கொண்டு அனுமதியை வாரி வழங்குகின்றன. அதனால் இக்கோளாறுகளைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு விதமான சவால்கள் உள்ளன.

உலகில் காபன் படிவு அதிகமாகிறது என காலநிலை தொடர்பான டுபாய் மாநாட்டில் எச்சரிக்கை விடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி▼





# மனிதனின் சுயநலத்தால் இயற்கை கண்ணீர் விடுகிறது

தொடர்ச்சி▲

போதைப் பொருள் மாபியாவைப் போல் மணல் அகழ்விற்கும் பெரிய மாபியாக்கள் உருவாகிவிட்டன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய காவல்துறை, புவிச்சரிதவியல் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, வனத்திணைகளம், பிரதேச செயலகங்கள் ஆகியன லஞ்சம் பெற்றுக் கொண்டு இயற்கையை ஏலம் கூறி விற்கிறார்கள்.

மணல் அள்ளிச் செல்லும் டிப்பரிலிருந்து வழிகிறது ஆற்றின் கண்ணீர் என்பதை எந்த அதிகாரியும் புரிந்து கொண்டவர்களாகத் தெரியவில்லை. இதில் பல ஆற்றங்கரைகளில் அதிகளவில் விவசாய செய்கையில் ஈடுபடுகின்றனர். ஆனால் தற்போது அந்த இடங்கள் எல்லாம் உவர்நீர் அதிகரித்துவிட்டதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குட்படுகிறது. விவசாயம் இல்லாவிட்டால் மனிதன் உயிர் வாழ முடியுமா?

இந்த ஆறுகளில் ஒரு மண் கூட்டம் உருவாக எட்டு தொடக்கம் பன்னிரண்டு வருடங்கள் தேவை என கூறப்படுகிறது. ஆனால் தற்போது ஆறுகள் மணல் இன்றி சேற்று நிலமாக உள்ளன. பல இடங்களில் நீதிமன்றங்கள் தடை செய்த போதும் கூட அதிகாரிகளின் ஆதரவுடன் மணல் அபகரிக்கப்படுகிறது. உள்ளூர்வாசிகள் மட்டுமின்றி வெளியிடத்து நபர்களாலும் மணல் கொள்ளை சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இதில் அரச படையினரும் கூட ஈடுபட்டு வருகின்றனர். சீமந்துக்கல், சாடி, தூண் போன்றவற்றை உற்பத்தி செய்து தமது முகாம்களுக்கு முன்னுக்கு வைத்து விற்பனை செய்தும் வருகின்றனர்.

அதேபோல் கடற்கரை பகுதிகளிலும் மண் அகழ்வதனால் பல ஊர்களில் கடல் தண்ணி உள்ளே வருகிறது.

எனவே இந்த இயற்கை வளச் சுரண்டலுக்கு அரசியல்வாதிகள் பின்னணியில் அதிகாரிகளின் ஆசீர்வாதமும் கிடைப்பதால் அவற்றை எப்படித் தடுப்பது?

பல போராட்டங்கள், பல கூட்டங்கள், பல கள விஜயங்கள் எல்லாம் நடைபெற்றும் எந்தப் பயனும் கிட்டவில்லை.

இயற்கைக்கு எதிரான மனிதனின் செயல்பாடு பாரிய இயற்கை அனர்த்தத்தை ஏற்படுத்தும். நில அதிர்வு, சுனாமி, அதிக மழை, புயல், அதிக வெப்பம் என்பன எதிர்காலத்தில் நிகழலாம் என நாசா உட்பட பல சூழலியல் மற்றும் காலநிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தபோதும் மனிதன் இயற்கையை அழித்துத் தனது சொகுசு வாழ்வியலை உயர்த்தும் நோக்கையும் போக்கையும் கைவிட்டவனாகத் தெரியவில்லை. இவர்களுக்கு உதவியாக அதிகாரிகளும் உள்ளமையால் சட்டவிரோத மண்அகழ்வு, காடழிப்பு போன்றவற்றை நிறுத்துவது என்பது இலகுவான விடயம் அல்ல.





ஆகவே இந்த அதிகாரிகளுக்கும், சட்டவிரோத மணல் அகழ்வாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, இயற்கையில் மணலும் மரமும் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, வாழ்க்கைக்கும் வாழ்வியலுக்கும் அவை எவ்வளவு முக்கியமானவை. என்பதை உணர்த்த வேண்டும். இல்லையேல் இதை எந்த சந்தர்ப்பத்திலும் தடுக்க முடியாது.

இயற்கைக்கு எதிரான செயற்பாட்டில் மனிதன் தோற்றே போவான். இயற்கையின் சமநீதி, அறம் எவருக்கும், எதற்கும் இடங்கொடுக்காது.

குற்றம் என்று தெரிந்தும் தண்டிக்கமுடியாத சட்டம், ஊழல் என்று தெரிந்தும் ஒழிக்க முடியாத சட்டம், தீமை என்று தெரிந்தும் தடை செய்ய முடியாத சட்டம் – இந்த நாட்டின் ஜனநாயகம் இதுதான்.

ஆகவே இயற்கையைக் காப்போம். இயல்பாக வாழ வழி தேடுவோம்.

ஆகவே இயற்கையை காப்போம் இயல்பாக வாழ வழி தேடுவோம். எனவே வள்ளுவம் கூறுவது போல 'செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்'

# உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதியாக சிரேஷ்ட பேராசிரியர் வேல்நம்பி தெரிவு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாக சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய பீடதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசனின் பதவிக்காலம் எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான விசேட பேரவை அமர்வு நேற்றுப் பிற்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பீடாதிபதி தெரிவுக்காக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், கணக்கியல் துறை சிரேஷ்ட பேராசிரியருமான தி.வேல்நம்பி, விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கு. வேலாயுதமூர்த்தி மற்றும் விலங்கியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் க.கஜபதி ஆகியோர் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

பீடாதிபதி தெரிவுக்கு ஆர்வத்தை வெளிப்படுத்தியவர்களின் சுய சமர்ப்பணம் இடம்பெற்றது. இதன்போது இரண்டு பேராசிரியர்களே சுய சமர்ப்பணத்துக்கு வருகை தந்திருந்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாக்களிப்பின் போது சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் முதனிலை பெற்று உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் அடுத்த பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குப் பீடாதிபதியாகச் செயற்படுவார்.



# முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வுமாநாடு யாழ். பல்கலைகலையில் நேற்றுத் தொடங்கியது

யாழ்ப்பாண வளாகம் எனும் பெயரில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்துடன் ஐம்பதாண்டைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டு முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வுமாநாடு நேற்றைய தினம் இடம்பெற்றது.

'நாளையை வலுப்படுத்தல் – கல்வியின் போக்குகளும் அவற்றை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் வடக்கு மாகாணத்தின் இயலுமைகள்' எனும் கருப்பொருளில் இம்மாநாட்டை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புக்கள் பீடமும் கலைப்பீடத்தைச் சேர்ந்த கல்வியியல் துறையும் இணைந்து ஒழுங்கமைத்துள்ளன.

இந்த மாநாடானது நேற்றும் இன்றும் காலை மற்றும் மாலை அமர்வுகளாக நடைபெறுகின்றது. இம்மாநாட்டின் காலை அமர்வுகள் கைலாசபதி கலையரங்கிலும் மாலை அமர்வுகள் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்திலும் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர்.சி. சிறிசற்குணராசா தலைமையிலும் உயர்பட்டப்படிப்புக்கள் பீடப் பீடாதிபதி பேராசிரியர்.செ.கண்ணதாசன் மற்றும் கலைப் பீடாதிபதி பேராசிரியர்.சி.ரகுராம் ஆகியோரின் இணைத்தலைமையிலும் இவ் ஆய்வுமாநாடு இடம்பெறுகின்றது.

இந் நிகழ்வுல் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.










# தொழில், வேலைவாய்ப்பு அமைச்சினால் மன்னாரில் நடமாடும் சேவை முன்னெடுப்பு

## பல ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

( வாஸ் கூஞ்ஞ )

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் அனைத்து கிராமங்கள் தோறும் உள்ள மக்களுக்கும் கிடைக் கப்பெறுவதற்கான நடமாடும் சேவை மன்னார் மாவட்டத்தில் நேற்று சனி, மற்றும் இன்று ஞாயிறு ஆகிய இரண்டு தினங்கள் நடைபெறுகின்றது.

நேற்று இச்சேவையின் முதல் நாள் நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் . இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் வழிகாட்டலிலும், தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் எண்ணக் கருவில், இராஜாங்க அமைச்சர் புஸ்பகுமாரவின் ஒத்துழைப்புடனும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பங்களிப்புடனும் இந்த நடமாடும் சேவை மன்னாரில் நடைபெற்று வருகின்றது.

இதில், இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களங்கள் இணைந்து தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறக்கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படடு வருகின்றன.

குறிப்பாக ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் பணிக்கொடை தொடர்பான விடயங்க ளுக்கான பிரச்சினைகள் தீர்வு வழங்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒவ் வொரு பாடசாலைகள் தெரிவு செய் யப்பட்டு அவைகளுக்கு 'சிமாட் போட்' உபகரணங்கள் தொழில் அமைச்சினால் வழங்கப்பட்டன.

இத்துடன் ஆயிரம் வறிய மாணவர் களுக்கு அவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை உபகரணங்கள் வழங்கும் செயற்பாடும் நடைபெற்றது.

மேலும் 'சிமாட் யுத்' திட்டத்தின் கீழ் வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் தகுதிக ளுக்கு ஏற்றவாறு பொருத்தமான தொழில் வாய்ப்புகளும் வழங்கும் திட்டமும் இதற்குள் அடங்கியிருந்தது.

இதில் 40 வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களும் பங்கு பற்றியிருந்தன. இதனால் மன்னா ரிலுள்ள இளைஞர், யுவதிகள் வெளி நாட்டு வேலை வாய்ப்புக்கள் பெறு வதற்கான வழிகாட்டலும் இங்கு காணப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் முறைசாரா தொழில் புரிவோருக்கும் நன்மை பயக்கும் திட்டங்களும் அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன.

வெளிநாடுகளில் பணிபுரிகின்ற வர்களின் இங்குள்ள பிள்ளைகளுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலை உபகரணங்கள் நிதி உதவிகள் கொண்ட திட்டங்களும் முன்னெடுக்கப்பட் டன.










# மன்னார் பேசாலை கிராமத்திற்கு அமைச்சர் டக்ளஸ் நேற்று விஜயம்

## மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என உறுதி

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று சனிக்கிழமை காலை பேசாலை பகுதிக்கு விஜயம் செய்து ஐஸ் தொழிற்சாலை மற்றும் மீனவ கூட்டுறவு சங்க அலுவலகம் மற்றும் கடற்கரை பகுதிகளைப் பார்வையிட்டார்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பேசாலை கிராமத்தில் மிக நீண்ட காலமாக பழமை வாய்ந்த ஐஸ் தொழிற்சாலை கிராமத்தின் பிரதான பகுதியில் பாழடைந்து மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

இந்த ஐஸ் தொழிற்சாலை வளாகத்தில் முறை கேடான செயல்கள் இடம் பெற்று வருகின்றமை குறித்து மக்களினால் முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டு வந்தன.

ஐஸ் தொழிற்சாலை மிக நீண்ட காலமாக பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் காணப்படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வந்துள்ளார்கள். பேசாலை கிராமத்தில் தபால் அலுவலகம் தனியார் கட்டடத்தில் வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகிறது. உரிய பஸ் தரிப்பு நிலையம் இன்மையால் பிரதான வீதியிலேயே பஸ்கள் தரித்து இருப்பது பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வந்தது. சந்தை கட்டடத் தொகுதி இல்லாமல் கிராமத்தின் ரயில்வே பிரதான வீதியில் குறித்த நாள்களில் வியாபார நடவடிக்கை இடம் பெற்று வருகிறது.

மேலும் ஆயுர்வேத வைத்திய நிலையம் வசதி குறைந்த ஒரு சிறிய மண்டபத்தில் இயங்குகின்றது.

இந்நிலையை கருத்தில் கொண்டு பழைய ஐஸ் தொழிற்சாலை மற்றும் அதனோடு கூடிய இடங்கள் குறித்த திட்டங்களுக்கு வசதியாக காணப்படும் நிலையில் அபிவிருத்தியை நோக்கி திட்டங்களுக்கு அதனத் தந்து உதவுமாறு அமைச்சரிடம் மக்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேசாலை பகுதிக்கு விஜயம் செய்து ஐஸ் தொழிற்சாலை மற்றும் மீனவ கூட்டுறவு சங்க அலுவலகம் மற்றும் கடற்கரை பகுதியையும் பார்வையிட்டார்.

தமது தேவைகளை வலியுறுத்தி பேசாலை கிராமத்தின் மீனவர் அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், பொதுமக்கள் ஒன்று கூடி பேசாலை கிராமத்தின் உதவி பங்கு தந்தை தலைமையில் அமைச்சரை ஐஸ் தொழிற்சாலை பகுதியில் வரவேற்று உரையாடினர்.

அந்த இடத்தை அமைச்சருடன் மக்களும் பார்வையிட்டு தமக்கான நான்கு கோரிக்கைகளை வலியுறுத்தி அமைச்சரிடம் அவற்றை முன்வைத்தனர்.

இதனை அடுத்து அமைச்சர் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய செப மண்டபத்தில் மக்கள் பிரதிநிதிகளை சந்தித்து மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை தாம் நிறைவேற்றி தருவதாக வாக்களித்தார்.

பழைய ஐஸ் தொழிற்சாலை யை அகற்றுவதற்கும், மக்கள் கோரிய திட்டங்களை அமுல் படுத்துவதற்கும் நடவடிக்கை முன்னெடுப்பதாக அவர் தெரிவித்தார்.



















# ஈ.பி.டி.பியின் அலுவலகம் மன்னாரில் திறந்து வைப்பு

(மன்னார் நிருபர்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) மன்னார் மாவட்ட அலுவலகம் நேற்றைய தினம் சனிக்கிழமை காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் – தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைக்கப்பட்ட இந்த அலுவலகத்தை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் ஆகியோர் இணைந்து வைபவரீதியாகத் திறந்து வைத்துள்ளனர்.

நீண்ட காலமாக மன்னார் மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் கிளை அலுவலகம் இயங்காத நிலையில் இப்போது அது அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வைத்தியர் கதிர்காமநாதன்,ஈ.பி.டி.பி. கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள், இளைஞர் அணித் தலைவர், செயலாளர், பிரதேச இணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்










# தேசிய ரீதியில் உயர் கௌரவம் பெற்ற இதழியல் கலாமேதை எஸ்.டி.சிவநாயகம்

**இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறைக்கு புதுமெருகூட்டி அதனை வளர்த்த இதழியல் கலா மேதை எஸ்.டி.சிவநாயகத்தின் 24 ஆவது சிரார்த்த தினம் நாளை 22.04.2024இல் அனுஷ்டிக்கப்படுகிறது.**

**சிவா இராஜஜோதி**
(பொதுச் செயலாளர்,
சாயிபாபா (கொழும்பு) மத்திய நிலையம்)

02.07.2021 இல் திருகோணமலையில் பிறந்தவர் சிவநாயகம். அவரது துணைவியரான மங்களவதி மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். எனினும், கொழும்பு – கொட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலயத்தில் (தற்போது விவேகானந்தா கல்லூரி) சுமார் 35 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி பலரை கல்விமான்கள் ஆக்கியவர்.

சிவநாயகம் 1946 ஆம் ஆண்டில் கூட்டுறவு சமாஜம் வெளியிட்ட 'ஐக்கிய தீபம்' எனும் சிற்றிதழின் (சஞ்சிகை) கிழக்கு மாகாண ஆசிரியராக தனது 25ஆவது வயதில் எழுத்துலகில் கால் பதித்தார். 1947 ஆம் ஆண்டில் இவர் தனது சொந்தத்தில் 'உதயம்' எனும் சிற்றிதழை ஆரம்பித்து, அதன் ஆசிரியராக திகழ்ந்தார். 1948 ஆம் ஆண்டில் தினகரன் நாளிதழ் உதவி ஆசிரியராக இணைந்து, தேசிய ரீதியில் தனது இதழியல் பணியை தொடரும் வாய்ப்பைப் பெற்றார்.

அதன் பின்னர், இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபக தலைவரும் சட்டத்துறை கலாநிதியுமான எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அழைப்புக்கிணங்க, 1950 ஆம் ஆண்டின் முற்பகுதியில் 'சுதந்திரன்' வார இதழின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பை ஏற்று, அதனைத் திறம்பட நடத்திப் புகழ் பெற்றார். அதன்பலனாக 1960ஆம் ஆண்டில் வீரகேசரி நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. 1965 ஆம் ஆண்டு வரை சுமார் 5 ஆண்டுகள் அவர் வீரகேசரியில் பணியாற்றியிருந்தார். அதன் பிறகு சுயாதீன பத்திரிகை சமாஜத்தில் இணைந்து, 'தினபதி' எனும் நாளிதழையும் 'சிந்தாமணி' எனும் வார இதழையும் புதிதாக உருவாக்கி அவற்றின் பிரதம இதழாசிரியராக இறுதிவரை, (1966-1990) அதாவது அந்த ஸ்தாபனம் மூடப்பட்டகாலம் வரை பணியாற்றினார். தினபதி மற்றும் சிந்தாமணி பத்திரிகைகளை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்தமைக்காக பிரதம இதழாசிரியராக விளங்கிய சிவநாயகத்தை அந்தப் பத்திரிகை நிறுவனம் தனது பணிப்பாளர்களில் ஒருவராக நியமித்து கௌரவப்படுத்தியது.

அவ்வாறே, சிவநாயகத்தின் ஜனன தின நூற்றாண்டை (1921-2021) முன்னிட்டு, இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிட்டு அன்னாரை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தியது. இலங்கை பத்திரிகைத்துறை வரலாற்றில், தமிழ் பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு தேசிய ரீதியில் கிடைக்கப் பெற்ற மிக உயர்ந்த கௌரவம் இது எனலாம்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் அவர்களின் வழிகாட்டலில், அப்போதைய ஊடகத்துறை அமைச்சராக விளங்கிய தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும அவர்களின் பணிப்புரையின் பேரில் இந்த நினைவு முத்திரை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். சிரேஷ்ட பத்திரியையாளர் எச்.எச்.விக்கிரமசிங்க அவர்களின் எண்ணக்கருவில் உருவாகிய இந்த செயல்திட்டத்துக்கு,



கொழும்பு ஈஸ்வரன் பிரதர்ஸ் பணிப்பாளர் தெ.முருகேசு அவர்கள் அனுசரணை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிந்தாமணி பத்திரிகை மூலம் தமிழ் இலக்கியத்துறைக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஆசிரியர் சிவநாயகம் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் இலங்கைக்கு (கணினி மூலம்) அறிமுகமாவதற்கு முன்னரே, அதனை சிந்தாமணி இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக முதல் முதலில் அறிமுகப்படுத்தி, இலங்கை வாசகர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருந்தகை ஆசிரியர் சிவநாயகம் என்பதை தமிழ்கூறும் நல்லுலகம் அறியும்.

பத்திரிகைத்துறையில் பேராசானாகத் திகழ்ந்த ஆசிரியர் சிவநாயகம், சாயிபாபா ஆன்மீக ஸ்தாபத்தின் ஊடாக, சமய சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தவராவார். குறிப்பாக, கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் உருவாக்கப்பட்ட போது, அதன் ஸ்தாபக தலைவராக ஏகமனதாக தெரிவாகிய சிவநாயகம், 25 ஆண்டுகள் தொடர்ந்து அதே சாயி ஸ்தாபானத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவாகி வந்தார்.

1979ஆம் ஆண்டில் அப்போதைய நீதி அமைச்சராகவும், மட்டக்களப்பு மாவட்ட – கல்குடா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்கிய கே. டப்ளியூ. தேவநாயகத்தின் உதவியுடன், நாடாளுமன்ற சட்ட முறைமைகளுக்கு அமைவாக சத்ய சாயி பாபா (இலங்கை) அறக்கட்டளையகம் எனும் சாயி அமைப்பையும் சிவநாயகம் உருவாக்கினார். இலங்கையில் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்ட சாயி அறங்காவலர் சபை இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



# ரணில்: ராஜபக்ஷக்களின் வேண்டாத விருந்தினர்



புருஜோத்தமன் தங்கமயில்

ரணிலுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் இடையிலான அரசியல் புரிந்துணர்வு எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் நாளுக்கு நாள் மிக மோசமாக மாறி வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தி, அதில் வெற்றிபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கும் ரணிலிடம், முதலில் பொதுத் தேர்தலை நடத்தும் கோரிக்கையோடு ராஜபக்ஷக்கள் பேச்சுவார்த்தைக்கு சென்றதே, ரணில் – ராஜபக்ஷக்களுக்கு இடையிலான இணக்கப்பாட்டில் விழுந்த பலமான அடியாகும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் ஆதரவளித்தாலும் ரணிலால் வெற்றிபெற முடியாது என்று ராஜபக்ஷக்களின் எண்ணப்பாடு. அப்படியான நிலையில், ஜனாதிபதித் தேர்தலை முதலில் எதிர்கொண்டு அதில், தோற்பது என்பது ராஜபக்ஷக்களின் பலத்தினை மிகமோசமாக சிதைக்கும். அதுவும், ரணிலால் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியாது என்பதைக் காட்டிலும் அவரினால் முதல் இரு இடங்களில்கூட வர முடியுமா என்ற சந்தேகம் நீடிக்கின்றது. சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையில்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி என்ற நிலை தென் இலங்கையில் இருக்கின்றது. அப்படியான நிலையில், மூன்றாவது இடத்தைப் பிடிக்கப்போகும் ரணிலுக்காக ராஜபக்ஷக்கள் ஆதரவளித்தார்கள் என்ற நிலை காணப்பட்டால், அது பொதுத் தேர்தலில் ராஜபக்ஷக்களை பிரதான எதிர்க்கட்சி நிலை என்பதைத் தாண்டி மூன்றாம் நிலைக்கு தள்ளிவிடும். அது, எதிர்கால அடையாள அரசியலுக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதுதான் ராஜபகக்ஷக்களினதும் பொதுஜன பெரமுனவில் உள்ள பெரும்பான்மையானோரினதும் எண்ணப்பாடு. அதனால், முதலில் பொதுத் தேர்தலை நடத்தி, அதில் கௌரவமான தோல்வியோடு பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையை அடைவது குறித்துதான் பஸில் ராஜபக்ஷவும், நாமல் ராஜபக்ஷவும் சிந்தித்து செயலாற்றுகிறார்கள். ரணிலோடு மிக நெகிழ்வுப் போக்கோடு இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் – நாமலின் நிலைப்பாடுகளில் உள்ள யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட பின்னர், அமைதியாக விடயங்களை கவனிக்கும் நிலைக்கு சென்றிருக்கிறார். இப்போது, அவர் ரணிலுக்காக அவ்வளவு பரிந்து பேசுவதில்லை. கட்சியின் முடிவுதான் இறுதி முடிவு என்ற மாதிரியான விடயங்களை ஊடகங்களிடம் பகிர்ந்து கொள்கிறார்.

ஆனால், நாமல் ராஜபக்ஷவோ அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் ஒரு வேட்பாளர் களம் காண்பார் என்று அறிவித் திருக்கிறார். இப்போது பெரமுன பஸில் – நாமல் என்ற இரு ராஜபக்ஷக்களின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருக்கின்றது. பஸிலுக்கும் நாமலுக்கும் இடையிலான அதிகாரப் போட்டி என்பது வெளிப்படையானது. ஆனால், வெற்றியைப்பெற முடியாத ரணிலைத் தேவையற்றுத் தூக்கிச் சுமப்பது என்பது பெரமுன வைப் பலமிழக்கச் செய்துவிடும் என்பதில் அவர்கள் இருவரும் ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். அவர்களின் அரசியல் அதிகார இலக்கு 2029ஐ குறித்தது ஆகும். இனி வரப்போகும் ஐந்து வருடங்களை பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதன் மூலம் வெற்றிகரமான கட்டத்திற்கு நகர முடியும் என்பதில் அவர்கள் இருவரும் குறியாக இருக்கிறார்கள். 2029இல் யார் அதிகாரமிக்க பதவிகளில் அமருவது என்பது தொடர்பில் இருவரும் அப்போது அடித்துக் கொள்ளலாம். ஆனால், இப்போது தேவையற்று பொதுவெளியில் முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்துவது, கட்சிக்கு பாதிப்பானது என்ற கோணத்தில் சிந்தித்து செயலாற்றுகிறார்கள்.

ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டம் வெற்றிபெற்று இரண்டு வருடங்கள் ஆவதற்கு முன்னரேயே, ராஜபக்ஷக்கள் மீண்டும் தங்களின் அதிகார எல்லையைத் தொட்டுவிட்டார்கள். ராஜபக்ஷக்கள் மக்களின் கோபத்தினால் ஓடி ஒளிந்த போது, அவர்களின் அரசியல் எதிர்காலம் குறைந்தது ஒரு தசாப்த காலத்துக்காவது முடக்கப்பட்டுவிடும் என்றுதான் பல தரப்பினரும் எண்ணினார்கள். ஆனால், ராஜபக்ஷக்கள் மிகவேகமாகவே மீண்டு எழுந்திருக்கிறார்கள். 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு ராஜபக்ஷக்கள் அகற்றப்பட்ட ஒன்றரை ஆண்டுகளுக்குள்ளேயே அவர்கள், தென் இலங்கையில் மிக வீரியமான எழுச்சியை நிலைநாட்டினார்கள். இரண்டாவது தடவையாக, நாட்டு மக்களினால் துரத்தியடிக்கப்பட்ட பின்னரும்கூட அவர்கள் இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக மாறிவிட வேண்டும் என்ற நிலையை நோக்கி வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் இலங்கை அரசியல் என்பது, ஐக்கிய தேசியக் கட்சி எதிர் ஏனைய சிங்கள, பௌத்த தேசியவாத சக்திகள் என்ற நிலைப்பாட்டில் நிலைத்தது. ஆனால், ராஜபக்ஷக்களின் எழுச்சிக்குப் பின்னரான அரசியல் என்பது,

தொடர்ச்சி▼



# ரணில்: ராஜபக்ஷக்களின் வேண்டாத விருந்தினர்

தொடர்ச்சி▲

ராஜபக்ஷக்கள் எதிர் ஏனைய கட்சிகள் என்பதாக மாறிவிட்டது. அது, ராஜபக்ஷக்களுக்கு எதிரான மற்றைய கட்சிகளின் நிலைப்பாட்டினை உணர்த்துவது அல்ல. மாறாக, ராஜபக்ஷக்கள் தனித்தே மிகப்பலமாக இருக்கின்றார்கள் என்ற விடயத்தைத் தெளிவாக உணர்த்துகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி டி.எஸ்.சேனநாயக்கவின் ஆட்சி அமைப்போடு இலங்கை அரசியலின் மூல சக்தியாக மாறியது. அதுபோல, அந்தக் கட்சியின் அதியுச்ச அதிகார எழுச்சி ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் நிகழ்ந்தது. அதற்கு அடுத்து வந்த ரணசிங்க பிரேமதாஸ காலம் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சிக் காலத்தின் ஆரம்பமாகும். அதிலும், பிரேமதாஸ கொலையோடு கட்சி ரணிலின் கைகளுக்குள் விழுந்தது. அதன்பின்னரான காலம் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் பேரழிவுக் காலமாகும். இன்றைக்கு அந்தக் கட்சிக்கு என்றொரு வாக்கு வங்கியே இல்லை. கடந்த பொதுத் தேர்தலில் நாடு முழுவதிலுமாக இரண்டு இலட்சம் வாக்குகளைப் பெறுவதே மிகப்பெரிய போராட்டமாகப் போய்விட்டது. அப்படியான நிலையில், ரணிலால் தன்னுடைய கட்சியை வைத்துக் கொண்டு தேர்தல்களில் வெற்றிபெறுவது குறித்த சிந்திக்கவே முடியாது. அதனால்தான் புதிய பொதுச் சின்னத்தின் கீழ் ராஜபக்ஷக்களின் ஒத்தாசையோடு தேர்தலை எதிர்கொள்ள நினைக்கிறார். ஆனால், ஒரு கட்சியாக தன்னுடைய சின்னத்தைப் புறந்தள்ளி இன்னொரு சின்னத்தின் கீழ் செல்வது என்பது, கட்சியின் செல்வாக்கை மக்கள் மத்தியில் இழக்கப்பண்ணிவிடும் என்பது இயல்பான வாதமாகும். அந்த வாத்தின் பின்னால், ராஜபக்ஷக்களும் பெரமுனவும் நிற்கின்றது. பெரமுன என்பது, ராஜபக்ஷக்களினால் தோற்றுவிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட கட்சி. அந்தக் கட்சியின் வெற்றிகளிலும் இன்றைய நிலைத்திருப்பிலும் ராஜபக்ஷக்களைத் தாண்டி யாரினாலும் உரிமை கோர முடியாது. ஏனெனில், பெரமுனவும் – அதன் மொட்டுச் சின்னமும் ராஜபக்ஷக்களின் கட்சி என்ற ஒற்றைக் காரணத்தினால் தென் இலங்கையில் முதன்மைக் காட்சியாக மாறியதாகும்.

ராஜபக்ஷக்களின் தோள்களில் ஏறி ஆட்சியில் அமர்ந்த ரணில், ஆட்சியில் ராஜபக்ஷக்களின் தலையீடுகளை கிட்டத்தட்ட முழுவதுமாக தவிர்த்தார். ஆட்சியைக் கவிழ்க்கும் வல்லமை இருப்பதாக ராஜபக்ஷகளும், பொதுஜன பெரமுனவினரும் பொது வெளியில் வெளிப்படுத்தி வந்தாலும், அவை தொடர்பில் எந்தக் கரிசனையையும் ரணில் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி பதவியில் இருந்து 2024 நடுப்பகுதி வரையில் எந்தக் காரணத்தினாலும் யாரினாலும் தன்னை வெளியேற்ற முடியாது. அப்படியான நிலையில், ஆட்சியில் யாரின் தலையீடுகளையும் உள்வாங்காது, தன்னுடைய ஆளுமையை நிலைநிறுத்திவிட வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். அதன்மூலம், திவாலாகிப் போயிருந்த நாட்டை மீட்டெடுத்த தலைவனாகத் தான் பெயர் பெற முடியும் என்று ரணில் செயற்பட்டார். ஆனால், அவரின் எதிர்பார்ப்புக்கள் அவ்வளவு வெற்றியாளிக்கவில்லை. மக்களுக்கு ஆட்சியின் மீதான வெறுப்புணர்வு என்பது பெரிதாக குறையவில்லை. ஆட்சி மாற்றம் ஒன்றை தேர்தலில் மூலம் நிகழ்த்திவிடுவதற்காக காத்திருக்கிறார்கள். இந்த கள யதார்த்தம்தான் ரணிலின் பிடி ராஜபக்ஷக்களின் முன்னால் தளர்வதற்கு முக்கிய காரணமாகும்.

ஆட்சியை மக்கள் மெச்சும் அளவுக்கு நடத்துவதன் மூலம், பொதுஜன பெரமுனவை இரண்டாக உடைத்து ஓர் அணியினரைத் தன் பின்னால் அணிதிரட்டுவதன் மூலம் எதிர்கால தேர்தல் வெற்றிகளை ரணில் இலக்கு வைத்தார். ஆனால், கள யதார்த்தம் அவருக்கு எதிரான நிலையை வெளிப்படுத்துவதை உணர்ந்து கொண்ட பெரமுனவினர், ரணிலின் பக்கம் செல்வது, அரசியல் தற்கொலையாகிவிடும் என்ற சுதாகரித்தக் கொண்டு விட்டார்கள். இந்த இடம்தான், ராஜபக்ஷக்களின் முன்னால் ரணிலை மீண்டும் சிறிய மனிதராக மாற்றி

தொடர்ச்சி▼





# ரணில்: ராஜபக்ஷக்களின் வேண்டாத விருந்தினர்

தொடர்ச்சி▲

விட்டது. யாருக்கு மக்களின் அதிக ஆதரவு என்பதுதான் அரசியலில் அதிகாரத்தை தீர்மானிக்கின்றது. ராஜபக்ஷக்களை புறந்தள்ளிவிட்டு மேலெழ முடியும் என்ற நம்பிக்கையோடு ரணில் செயற்பட்ட போதும், ரணிலைத் தாண்டி ராஜபக்ஷக்கள் மக்களின் பலத்தோடு இருப்பது உறுதியானது. அதனால் ரணிலின் பிடி இப்போது தளர்ந்திருக்கின்றது. ராஜபக்ஷக்கள் அந்த இடத்தில் பிடியை இறுக்கியிருக்கிறார்கள்.

ரணிலை கடந்த காலங்களில் தமிழ் – முஸ்லிம் மக்கள் கணிசமாக ஆதரித்து வந்திருக்கிறார்கள். ராஜபக்ஷக்களுக்கு எதிரான முதன்மை முகமாக ரணிலை தமிழ் – முஸ்லிம் மக்கள் கருதினார்கள். அதனால்தான், தென் இலங்கை முழுவதும் ராஜபக்ஷக்கள் வெற்றிபெறும் போது, வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் ரணில் ஆதரவு அணி வெற்றி வந்திருக்கின்றது. ஆனால் தற்போதைய நிலை அப்படியானது அல்ல. ஏனெனில், ரணிலை பதவியில் ஏற்றியது ராஜபக்ஷக்கள். இந்த விடயம் ரணிலை தமிழ் – முஸ்லிம் மக்களிடம் இருந்து எண்ணிப் பார்க்காத அளவில் அகற்றியிருக்கின்றது. ரணிலுக்கும் ராஜபக்ஷக்களுக்கும் இடையிலான அரசியல் இழுபறி தீர்க்க முடியாத கட்டத்தை எட்டியிருக்கின்ற இன்றைய நிலையிலும், ரணில் என்பது ராஜபக்ஷக்களின் முகம் என்பதே தமிழ் – முஸ்லிம் மக்களின் எண்ணமாகும். அந்த எண்ணத்தை இப்போதைக்கு மாற்றமுடியாது. அதனால், ஜனாதிபதித் தேர்லொன்று வந்தால், அதில் ரணிலை புறந்தள்ளியே தமிழ் – முஸ்லிம் மக்கள் வாக்களிப்பார்கள். அதனால், ரணினால் நினைத்த அளவுக்கு பிரதான வேட்பாளரைாகும் தகுதி கேள்விக்குள்ளாகி இருக்கின்றது. இந்த இடத்தை ராஜபக்ஷக்கள் விடுவதாக இல்லை.

பதவிகளுக்காக ராஜபக்ஷக்களை எதிர்த்து ரணிலைச் சுற்றி வந்தவர்களும் கூட, இப்போது அவருக்கான ஆதரவு – கட்சிப் பலம் என்பது இல்லை என்ற நிலையில், அவரை விட்டு எப்போது தப்பியோடுவது என்ற எண்ணத்தோடு இருக்கிறார்கள். அதனால், நம்பிக்கையோடு உரையாடுவதற்கான அரசியல் சகா ஒருவரைக்கூட ரணிலால் இப்போது தேடி அடைய முடியாத நிலை இருக்கின்றது. இது, தென் இலங்கை அரசியலில் ரணில் அற்ற அரசியல் ஒழுங்கை நோக்கிய பாதையைத் திறந்திருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தலோடு ரணிலின் அரசியல் வாழ்வு முடிந்துவிட்டதாகவே அனைவரும் நினைத்தார்கள். ஆனால், ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டம் வடிவில் ரணில் மீண்டும் அரசியலில் முதன்மை நபராக மாறினார். அதியுச்ச அதிகாரத்தையும் அடைந்தார். ஆனால், அந்த அதிகாரத்தை தக்க வைக்கும் நிலையினை அவரினால் அடைய முடியாது போய்விட்டது. தென் இலங்கை அரசியல் களத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி கிட்டத்தட்ட முழுவதுமாக அகற்றப்பட்டு, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன என்ற மூன்று கட்சிகளை நோக்கி கூர்மைப்படுகின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால், ரணில் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பார் என்று நம்பிய சில தமிழ்த் தலைவர்கள், அவருக்காக முழு வீச்சில் வேலை செய்வதற்கு தயாராக இருந்தார்கள். குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை வெற்றிபெற வைப்பதற்கான திட்டங்களின் போக்கில் தமிழ்ப் பொது வேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு என்ற விடயங்களை கையாளத் தொடங்கினார்கள். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பை தென் இலங்கை பிரதிபலிக்கவில்லை. இதனால், ரணிலை நம்பிய தமிழ்த் தலைவர்களும் கடந்த காலத்தில் ஏமாற்றப்பட்டதைப் போன்று, இப்போதும் ஏமாறும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ராஜபக்ஷ்க்களை வெற்றிக் குதிரைகளாகவும் அதில் ஏறி பயணிக்கும் வெற்றி வீரனாக தன்னையும் ரணில் எண்ணிக் கொண்டிருந்தார். அந்த நிலையை அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரையில் பேணவும் முடியும் என்றும் அவர் நம்பினார். ஆனால், ராஜபக்ஷக்கள் தங்களை வீழ்ந்துவிட்ட யானைகளாக கருதாமல், மீண்டும் துள்ளி எழுந்து ஓடும் குதிரைகளாக எண்ணி, தனித்து ஓடத் தொடங்கிவிட்டார்கள். அந்த ஓட்டம் 2029இல் அடையப்போகும் தேர்தல் வெற்றிகளைக் குறித்தது. அதற்காக அவர்கள் யாரையும் தங்களின் மீது ஏற்றுவார்கள். தேவையில்லை என்றால், தூக்கி எறிந்துவிட்டு தொடர்ந்தும் ஓடுவார்கள். 2022இல் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகவே ரணிலை ராஜபக்ஷக்கள் தூக்கிச் சுமந்தார்கள். இப்போது, தேவை முடிந்துவிட்டது. அரசியல் நியதி, தூக்கி எறிந்துவிட்டு வெற்றிக் கோட்டை அடைந்து கொள் என்பதாகும். அதில் ராஜபக்ஷக்கள் தெளிவாக இருக்கிறார்கள். அதனால், ரணில் இப்போது ராஜபக்ஷக்களுக்கு வேண்டாத விருந்தினர்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.04.2024

### மேஷம்

இன்று அதிர்ஷ்டமான நாள் . கடினமான பணிகளையும் என்று எளிதாக முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று திட்டமிட்டபடி பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் திறமை காரணமாக நீங்கள் உங்கள் உங்கள் சக பணியாளர்களை காட்டிலும் முந்தி இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் வெளி யிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் இது சாத்தியம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிபீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

### ரிஷபம்

இன்று நீங்கள் சுய வளர்ச்சிக்கான செயல்களில் ஈடுபட ஏற்ற நாள். என்றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. நெருங்கிய நண்பர்கள் கூட நம்பிக்கை துரோகம் செய்வார்கள்.

பணிகள் சலிப்பை தருவதாக இருக்கும். இதனால் சோர்வு காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் உறவில் இடையூறுகள் ஏற்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக பண நஷ்டம் ஏற்படலாம். கவனமாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.

### மிதுனம்

இன்று ஆன்மீக விஷயங்களில் ஈடுபடுவதற்கு உகந்த நாள். இன்று பிரார்த்தனை மேற்கொள்வது மற்றும் இசை கேட்பது உங்களுக்கு ஆறுதலைத் தரும். இந்த நாட்டங்கள் தான் நீங்கள் விரும்பும் ஆறுதலை உங்களுக்கு பெற்றுத் தரும்.

பணியிடத்தில் கடுமையான பணிகள் காணப்படும். உங்கள் செயல்திறனை மேம்படுத்த நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக வன்மையாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். பணப்புழக்கும் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

### கடகம்

உங்கள் திறமையான தொடர்பு மூலம் நல்ல பலன்களைக் காண முடியும். ஆன்மீகத்தில் ஈடுபடுவது மற்றும் மந்திர உச்சாடனம் செய்வது ஆன்மீக சொற் பொழிவுகள் கேப்பதன் மூலம் சிறப்பாக உணரலாம்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். உங்களின் கடின உழைப்பு மூலம் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

குடும்பப் பிரச்சினை சம்பந்தமான உங்கள் கருத்துக் களை உங்கள் துணையுடன் மனம் திறந்து ஆலோசிப் பீர்கள். உங்கள் அகந்தை போக்கை முறியடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

### சிம்மம்

இன்று கடினமான சவால்கள் காணப் படும். நீங்கள் திறமையாக கையாள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நேரலாம். உங்கள் பொறுமையை இழப்பீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற மருத்துவ செலவுகள் ஏற்படும்.

### கன்னி

இன்று நீங்கள் கவலைக்கு ஆளாக லாம். இதனால் உங்கள் அடிப்படை பணிகளைக் கூட உங்களால் செய்ய இயலாது. சகஜமான அணுகுமுறை தேவை.

தன்னம்பிக்கையின்மை காரணமாக இன்று பணியில் மந்த நிலை காணப்படும்.உங்கள் பணிகளை திட்டமிட்டு அமைத்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடன் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் நல்லுறவை பராமரிக்க இயலாது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். இன்று காணப்படும் பொறுப்புகள் எதிர்கொள்ள கடன் வாங்க நேரும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப் படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

### துலாம்

அனைத்து விஷயங்களிலும் பொறுமை தேவை. மனதில் குழப் பத்திற்கு ஆளாகாதீர்கள். எந்த செய லையும் செய்வதற்கு முன்பு ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கவும். சிறிது மந்தமாக காணப்படுவீர்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளும் ஏமாற்றங்களும் காணப்படும். சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். உங்கள் செலவுப் பழக்கத்தை கட்டுப்படுத்துவது நல்லது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

### விருச்சிகம்

இன்று உங்கள் வளர்ச்சியில் முன் னேற்றம் கிடைக்கும் வகையிலான நற்பலன்கள் காணப்படும்.பிறருடன் சுமூகமாகப் பழகுவது நன்மை தரும். வாழ்வின் நன்மைகளையும் தீமைகளையும் நீங்கள் உணர்வீர்கள்.

உங்கள் கடின உழைப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இது நல்ல புரிந்துணர்விற்கு வழி வகுக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். சம்பாத் தியம் அதிகரிக்கும்.நீங்கள் கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரண மாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.04.2024




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மகிழ்வைத் தரும். இன்று செயல்கள் சுமூகமாக நடைபெறாது.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப் படாது. கவனக்குறைவு காரணமாக தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளி மேற்கொள்ளும் பொழுது நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப் படாது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு மற்றும் வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இதனால் பணம் இழந்து கவ லைப்படுவீர்கள். உங்களிடம் பதற்றமும் பாதுகாப் பின்மையும் காணப்படும். நீங்கள் ஆரோக்கியமாய் இருக்க அமைதியாய் இருக்க வேண்டும்.




இன்று செயல்பாடு மிக்க நாளாக இருக்காது. இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம். இன்று குறைந்த எதிர்பார்ப்புடன் காரியம் ஆற்றினால் அதற்குண்டான வெகுமதி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு கிடையாது. உங்கள் துணையுடன் உரையாடும்போது வார்த்தைகளில் கவனம் தேவை.

நிதிநிலைமை மோசமாக காணப்படும். கூடுதல் பணம் செலவு செய்வீர்கள். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

கால் மற்றும் தொடை வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்றைய நாள் அவ்வளவு சிறப்பான பலன்கள் கிடைக்காது. தைரியம் குறைந்து காணப்படும். என்றாலும் நம்பிக்கையுடன் தைரியமான மன ஆற்றலுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக பணிகளை சுமக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடனான உறவு திருப்திகரமாக இருக்காது. நீங்கள் சம்பவங்களை கவனமாக கையாள வேண்டும்.

உறவில் திருப்தியற்ற உணர்வு காணப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பண வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியம் சிறப் பாக இருக்காது. முறையற்ற உணவு முறை காரணமாக செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக் கும் நாள். உங்களின் விட்டுக்கொடுத்து போகும் அணுகுமுறை காரணமாக நல்ல பலன்கள் கிடைக்கும். நல்ல உறவை பராமரித்து உங்கள் நண்பர்கள் மற்றும் அக்கம் பக்கத்தவரின் நல்லு றவைப் பெறுவீர்கள்.

பணியிடச் சூழல் இன்று உங்களுக்கு சாதகமாக இருக்கும். நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். சக பணி யாளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் சகஜமான மற்றும் நட்பான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். கணிசமான தொகை சம்பாதிக்கும் அதிர்ஷ்டம் காணப்படும்.











# ரஃபா நகர் மீது இஸ்ரேல் குண்டு வீச்சு: 6 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழப்பு

காஸாவின் ரஃபா நகர் மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் 6 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ரஃபாவின் புறநகரில் தெல் சுல்தான் பகுதியில் குடியிருப்புக் கட்டடத்தின் மீது குண்டுகள் வீசப்பட்டன என காஸா மக்கள் பாதுகாப்புக் குழு தெரிவித்துள்ளது.

எகிப்தின் எல்லையை ஒட்டியுள்ள ரஃபா நகரில் போரால் பாதிக்கப்பட்ட காஸாவின் மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து அடைக்கலம் புகுந்துள்ளனர்.

அவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் உள்ள பகுதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் உயிரிழந்தவர்கள் குழந்தைகளும் பெண்களுமேயன்றி போராளிகள் அல்லவெனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் 6 குழந்தைகள், 2 பெண்கள், ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் ரஃபாவின் அபு யூசுப் அல்நஜார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பாலஸ்தீனத்திற்கு எதிரான தாக்குதலை கிட்டத்தட்ட 7 வருடங்களாக இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

ஹமாஸ் - இஸ்ரேல் இடையிலான போர் காரணமாக மத்திய கிழக்கு மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் காஸா முனையில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களால் இதுவரை 34,049 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 76,901 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் நடத்திய தாக்குதல்களில் 1139 பேர் உயிரிழந்துள்ளனர்.

# பாகிஸ்தானில் கனமழையால் 87 பேர் உயிரிழப்பு; 80 பேர் காயம்





பாகிஸ்தானில் பெய்து வரும் கனமழையால் 87 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

80 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானில் கடந்த வாரம் முதல் பெய்து வரும் இடியுடன் கூடிய கனமழையால் ஏற்பட்ட மின்னல் தாக்கங்கள், கட்டட இடிபாடுகள் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவோ பகுதியளவாகவோ சேதமடைந்துள்ளன என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, வரலாறு காணாத மழையால் பாதிக்கப்பட்டுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தில் மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 24 மணித்தியாலங்களில் 142 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக துபாய் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்நாட்டு ஜனாதிபதி முகமது பின் சயீத் அல் நஹ்யான் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இயல்பு நிலைக்கு திரும்ப சவாலான பணிகளை எதிர் நோக்கியுள்ளதோடு, பெருமழையால் ஏற்பட்ட உட்கட்டமைப்பு சேதங்களை சீர்செய்ய அதிகாரிகள் விரைவாக செயற்படுகின்றனர் என தெரிவித்துள்ளார்.